**சென்னை பெருநகர கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட் எண் - 900**

50, ரித்தர்டன் சாலை, வேப்பேரி, சென்னை - 600 007.
தொலைபேசி : 2532 1795, 2532 3366, 2532 5494, 2642 0540

# சென்னை பெருநகர கூட்டுறவு வீட்டு வசதி சங்க திருமண மஹால்

பாண்டுரங்கன் தெரு, ஜம்புலி நியூகாலனி, மாதவரம், சென்னை - 600 051.

## நிகழ்ச்சிதாரர்கள் செலுத்த வேண்டிய இதர செலவுக்கான கட்டண விபரம்

*சமையல் பாத்திரம், ஹால், 550 சேர், 200 டைனிங் சேர், டைனிங்டேபிள் மணமகள், மணமகன் அறைகளில் குளிர்சாதன வசதியுள்ளது. ஸ்டோர் ரூம் உள்பட முகூர்த்த நாள் ஒரு நாள் வாடகை ரூ. 75000/- அரைநாள் வாடகை ரூ. 40000 மற்ற நாள் ஒரு நாள் வாடகை ரூ. 60000 அரைநாள் வாடகை ரூ. 30000 + சேவை வரி*

| விபரம் | ஒரு நாள் | அரை நாள் | ரூ. | பை |
|---|---|---|---|---|
| கிளீனிங் சார்ஜ் ........ | | | | |
| ஒலி / ஒளி ........ | | | | |
| முன்பந்தல் ........ | | | | |
| வாழைமரம் 2 ........ | | | | |
| சமையல் கேஸ் 1 சிலிண்டர் ரூ 1500/ ........ | | | | |
| ஜெனரேட்டர் 1 மணிக்கு ........ | | | | |
| மின்சாரம் 1 யூனிட் ........ | | | | |
| சாப்பிட்ட இலைகள் அகற்ற ஒரு நபர் கூலி ........ | | | | |
| தோசை தவா ........ | | | | |
| விஐபி சேர் 1-க்கு ........ | | | | |
| தண்ணீர் கட்டணம் ........ | | | | |
| தலையணை ........ | | | | |
| பவானி ஜமுக்காளம் ........ | | | | |
| வாசனைத் தெளிப்பான் - SCENT SPRAYER ........ | | | | |
| வரவேற்பு பொம்மை - WELCOME DOLL ........ | | | | |
| அலங்கார நீர் ஊற்று - FOUNTAIN ........ | | | | |
| சூப்பர்வைசர் படி ........ | | | | |
| வாட்ச்மேன் படி ........ | | | | |
| இதர வகைகள் ........ | | | | |
| ........ | | | | |
| ........ | | | | |
| ........ | | | | |
| ........ | | | | |

# சென்னை பெருநகர கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட் எண் - 900

50, ரித்தர்டன் சாலை, வேப்பேரி, சென்னை - 600 007.
தொலைபேசி : 2532 1795, 2532 3366, 2532 5494, 2642 0540

# சென்னை பெருநகர கூட்டுறவு வீட்டு வசதி சங்க திருமண மஹால்

பாண்டுரங்கன் தெரு, ஜம்புலி நியூகாலனி, மாதவரம், சென்னை - 600 051.

## விண்ணப்ப மனு

உறுப்பினர் எண் : தேதி............................

1. பெயர் ..............................................................................................

2. விலாசம் ..............................................................................................

..............................................................................................

..............................................................................................

தொலைபேசி எண் ........................................ அலைபேசி எண்......................................

3. (அ) மஹால் தேவைப்படும் நாள் ........................................... கிழமை

(ஆ) கிழமை நேரம்

4. மண்டபம் உபயோகப்படுத்துவதன் நோக்கம் :

5. மணமகன் பெயர் :

6. மணமகள் பெயர் :

7. வாசற்கால் வாழைமரம் இரண்டு தேவை / தேவையில்லை

8. தேவையான குளிர்சாதன அறை ........................................... சாதாரண அறை ..................................

9. சங்க நிர்வாக குழு அங்கத்தினர்கள் / சங்க சிப்பந்திகள் / சங்க முன்னாள் சிப்பந்திகள் / இதர கூட்டுறவு துறை மற்றும் கூட்டுறவு சங்க சிப்பந்திகள் / கூட்டுறவு வீட்டுவசதி துறை அலுவலர்கள் ஆகியோர் அதற்கான சான்று அளிக்க வேண்டும்.

சென்னை மெட்ரோ கூட்டுறவு வீட்டு வசதி சங்க திருமண மஹாலின் நிபந்தனைகளையும், சட்ட திட்டங்களையும் நன்கு அறிந்து கொண்டு இந்த மஹாலினை வாடகைக்கு எடுக்க விண்ணப்பித்து ரூ............................ (எழுத்தால் ரூபாய் ........................................................................ செலுத்துகிறேன்)

இப்படிக்கு

குறிப்பு : செலுத்தும் தொகைக்கு ரசீது பெற்றுக் கொள்ளவும்.

விண்ணப்பதாரர்

## நிபந்தனைகள்

1. மஹாலின் முதல் தளம் மற்றும் மணமகன், மணமகள் (குளிர்சதன வசதியுள்ள அறைகள்) மற்றும் மூன்றாம் மாடியில் விருந்தினர்கள் தங்குவதற்கு அறைகள் மட்டும் விண்ணப்பதாரரின் உபயோகத்திற்கு கொடுக்கப்படும்.
2. மஹாலை உபயோகப்படுத்தும் ஒரு நாள் என்பது முதல் நாள் பகல் 2.00 மணி முதல் மறுநாள் பகல் 1.00 மணி வரை (அல்லது) காலை 4.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை என்பதாகும். 1/2 நாள் என்பது காலை 4.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை (அல்லது) மாலை 2.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை. குறிப்பிட்ட காலத்திற்கு மேல் பயன்படுத்தினால் ஒரு மணி நேரத்திற்கு ரூ. 1000/- வீதம் கட்டணம் வசூலிக்கப்படும்.
3. மஹாலை குறிப்பிட்ட நேரத்திற்குக் குறைவாக உபயோகப்படுத்தி விட்டு பணம் திருப்பி கேட்டால் கொடுக்கப்பட மாட்டாது. நிகழ்ச்சி முன் பதிவு செய்து வாடகை பணம் கட்டிய பின்னர் நிகழ்ச்சி ரத்து செய்தால் எக்காரணம் கொண்டும் வாடகைப் பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.
4. எக்காரணத்தை கொண்டும் முன் பணம் (அட்வான்ஸ்) தவிர மற்ற வகை ரசீதுகளுக்கு பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.
5. உபயோகிப்பாளர் தாம் செலுத்தும் பணம் முழுவதற்கும் ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். ரசீதின்றி செலுத்தப்படும் பணத்திற்கு நிர்வாகம் பொறுப்பல்ல.
6. மஹாலினை விண்ணப்பதாரர் உபயோகிப்பதற்கென்று பதிவு செய்த தேதி எக்காரணத்தைக் கொண்டும் மாற்றிக் கொடுக்கப்பட மாட்டாது.
7. மஹாலிற்கு சொந்தமான பொருட்கள் உடைந்தாலோ அல்லது காணாமல் போனாலோ அதற்குண்டான தொகையை தாங்கள் செலுத்தியுள்ள முன் பணத்தில் பிடித்தம் செய்து மீதிப் பணம் கொடுக்கப்படும். சேதப்படுத்தப்பட்ட பொருட்களின் மதிப்பு ரூ. 1000/-க்கு (ரூபாய் ஆயிரம்) மேற்பட்டால் அதை தனியே உடனே செலுத்த வேண்டும்.
8. மஹாலில் கைகளால் எழுதுவதோ, சுவரொட்டி ஒட்டவோ ஆணிகள் போன்றவை எதுவும் அடித்தலோ கூடாது.
9. மஹாலில் கண்ட இடங்களில் துப்புவதோ, அசுத்தம் செய்வதோ ஜன்னல் வழியாக குப்பை எறிவதோ கூடாது. மீறினால் நிர்வாகத்தால் விதிக்கப்படும் அபராதம் செலுத்த வேண்டும்.
10. மஹாலிற்குச் சொந்தமான பொருட்களை மண்டபத்தை விட்டு வெளியே எடுத்துச் செல்லக் கூடாது.
11. மஹாலின் உள்ளே விழாக் கூடத்தில் (Marrage Hall) உணவு மற்றும் சிற்றுண்டி பரிமாறுதல் கூடாது. அதற்கென்று உள்ள சாப்பாடு கூடத்தை மட்டுமே (Dining Hall) உபயோகித்துக் கொள்ள வேண்டும்.
12. மஹாலிற்குள் அசைவ உணவு தயார் பண்ணவோ, பரிமாறவோ கூடாது.
13. மஹாலிற்குள் போதைப் பொருட்களோ, லாகிரி வஸ்துக்களோ எதுவும் கண்டிப்பாக உபயோகப்படுத்தக் கூடாது. மீறினால் காவல் துறைக்கு புகார் செய்யப்படும்.
14. மஹாலிற்குள் சூதாட்டம் விளையாட கூடாது. மீறினால் காவல் துறைக்கு புகார் செய்யப்படும்.
15. இரவு 9.00 மணிக்குமேல் ஒலி பெருக்கி உபயோகம் செய்யக் கூடாது.
16. மஹாலில் விழா நடத்தும் போது போலீஸ் பாதுகாப்பு வேண்டுமென்றால் அதற்கான ஏற்பாடுகளை விண்ணப்பதாரரே செய்து கொள்ள வேண்டும்.
17. மின்சாரத் தட்டுப்பாடு நேரத்தில் மண்டபத்தில் அலங்கார விளக்குகள் ஜோடனை செய்ய விரும்பினால் தமிழ்நாடு மின்சார வாரியம் வசம் முன் அனுமதி வாங்க வேண்டியது விண்ணப்பதாரரின் பொறுப்பு ஆகும்.
18. மஹாலில் எதிர்பாராத காரணங்களினால் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டாலும், மின்சார தடங்கல் ஏற்பட்டாலும் அதற்கு மஹாலின் நிர்வாகம் பொறுப்பு அல்ல.
19. மஹாலில் விழா நடைபெறும் போது, விழாவிற்கு வந்திருக்கும் நபர்களிடம் பொருட்கள் ஏதுவும் களவு போனால் அதற்கு மண்டப நிர்வாகம் பொறுப்பு அல்ல.
20. மஹாலில் விழா நடைபெறும் போது, விழாவிற்கு வருகை தந்திருக்கும் நபர்களில் யாருக்காவது ஏதேனும் விபத்து ஏற்பட்டால் அதற்கு மண்டப நிர்வாகம் பொறுப்பு அல்ல.
21. பட்டாசு வெடிக்கக் கூடாது. மீறினால் காவல் துறை நடவடிக்கை மேற்கொள்ளும், இதற்கு நிர்வாகம் பொறுப்பல்ல.
22. கண்டிப்பாக மண்டபத்தில் உள்ள சமையல் எரிவாயு உருளைகள் உபயோகப்படுத்த வேண்டும்.
23. எரிவாயு சிலிண்டர்கள், சிலிண்டர் கணக்கில் தான் கொடுக்கப்படும். மீதமிருந்தால் காலி சிலிண்டர் (Indane Gas Cyliner Commercial) கொடுத்து மாற்றி கொள்ள வேண்டும். இல்லையெனில் சிலிண்டருக்கான முழுத் தொகையும் வசூலிக்கப்படும்.
24. சமையல் எரிவாயு மற்றும் மின்சார கட்டணம் மாறுதலுக்கு உட்பட்டது.
25. மஹாலின் முன்புறம் சாலையில் ஆக்ரமித்து முன்புறக் கேட்டை அடைத்து பேனர்கள் கட்டக் கூடாது. பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் அசௌகரியமாக பேனர்களை பிளாட்பாரம், கேட்டை ஒட்டி வைக்கக் கூடாது, மீறினால், காவல்துறையில் புகார் கொடுக்கப்படும்.
26. மஹாலின் வெளியே சாலையோரங்களில் டியூப் லைட்டுகள் பொருத்தினால் தனியாக ஜெனரேட்டர் வைக்க வேண்டும்.
27. திருமண மேடை அலங்காரம், மின்விளக்கு அலங்காரம் ஆகியவைகளை சங்கத்தின் அனுமதி பெற்று செய்பவர்களின் பெயர் மற்றும் முகவரி சங்கத்தில் வைக்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சிதாரர் அவர்களில் யாராவது ஒருவரிடம் மட்டுமே அலங்காரம் செய்திட ஒப்பந்தம் செய்ய வேண்டும். தங்கள் விருப்பப்படி வேறு நபரை அலங்காரம் செய்ய ஏற்பாடு செய்தால், அதற்கு சங்க நிர்வாகத்திடம் முன் அனுமதி பெறவேண்டும்.
28. முன் பணம் (அட்வான்ஸ்) ஒரு நாள் / அரைநாள் ரூ. ................................ விழா நிகழ்ச்சிக்கு முன் தினம் ........................... அன்று கட்ட வேண்டும்.

    மேற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு செயல்படுவோம் என உறுதி அளிக்கின்றோம்.
29. அரசியல் பிரமுகர்கள் வருகை உண்டு / இல்லை. என்பதை முன் கூட்டி நிர்வாகத்திற்கு தெரிவிக்க வேண்டும்.
30. பட்டாசு வெடிக்க விரும்பினால் காவல்துறை / காவல்நிலையம் முன் அனுமதி பெறவேண்டும். அதன் நகல் சங்க நிர்வாகியிடம் முன்கூட்டியே ஒப்படைக்க வேண்டும்.
31. TDS / Sales Tax / Vat / GST மற்றும் அரசினால் விதிக்கப்படும் இதர வரிகள் ஏதேனும் இருப்பின் அதனை நிகழ்ச்சிதாரரே செலுத்த வேண்டும்.
32. மின் கட்டணம், தண்ணீர், எரிவாயு, கிளினிங் ஆள் கூலி, உள்ளாட்சி மற்றும் மாநகராட்சி ஆகியவற்றுக்கான கட்டணங்களை விழாதாரர்களே செலுத்த வேண்டும்.
33. சமையல்காரர், பூ அலங்காரம் செய்பவர், மஹால் உள் அலங்காரம் செய்தல், இசைக்கச்சேரி மற்ற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் நாதஸ்வர இசை வாசிப்பவர் ஆகியவற்றை நிகழ்ச்சிதாரர்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும் மேற்படி நிகழ்ச்சிகளுக்கு உதவி தேவைப்பட்டால் நிகழ்ச்சிதாரர் மண்டப மேலாளரை அனுகி ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

**விண்ணப்பதாரரின் கையொப்பம்**